# மரவள்ளி சாகுபடியில் வெற்றிக் கண்ட விவசாயி

**முனைவர். ம.அ.வெண்ணிலா, முனைவர்.இரா. தங்கதுரை மற்றும் பா.ச. சண்முகம்**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டாரம், பொடுத்தம்பட்டி அஞ்சல், சோமனஹள்ளி கிராமத்தைச் சார்ந்த விவசாயி திரு. தங்கவேலு த/ பெ. ஆட்டுக்காரன் அவர்கள் கடந்த 2004 முதல் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து மஞ்சள், மரவள்ளி, தக்காளி மற்றும் கத்திரி போன்ற பயிரகளை சாகுபடி செய்து வருகின்றார். இவருக்கு மொத்தம் 5 ஏக்கர் நிலம் உள்ளது. இவர் கடந்த 20 வருடங்களாக விவசாயம் செய்து வருகின்றார். இவர் கடந்த 2014 –ஆம் வருடம் மரவள்ளி சாகுபடி செய்து அதிக விளைச்சல் பெற்றுள்ளார். இவர் மரவள்ளி சாகுபடியில் பின்பற்றிய தொழில்நுட்பங்கள் பின்வருமாறு.

**1.இரகம்**: குங்கும ரோஸ்

**2. பருவம்** : டிசம்பர் - ஜனவரி

**3. கரணை நேர்த்தி** :விதைக் கரணைகளை கார்பண்டசிம் 2 கிராம் / லிட்டர் என்ற கரைசலில் நனைத்து நடவு செய்தேன்.

**4.இடைவெளி**

4 x 2 மீ என்ற இடைவெளியில் நடவு செய்தேன்.

**உர மேலாண்மை**

அடியுரமாக ஏக்கருக்கு 10 டன் தொழு உரம் மற்றும் சூப்பர் பாஸ்பேட் 150 இட்டு நிலத்தை கடைசி உழவு செய்தேன்.

**நீர்வழி உர அட்டவணை**

நீர்வழி உரமாக 19:19 :19, 13 :0: 45 மற்றும் யூரியா போன்றவற்றை நடவு செய்த 120 வது மற்றும் 210 வது நாட்களில் 5 நாட்கள் இடைவெளியில் 4 முறை நீர்வழி உரமாக அளிக்கப்பட்டது. 19:19 :19 35 கிலோவும் 13 :0: 45 170 கிலோவும் 0:0 :50 108 கிலோவும் மற்றும் யூரியா 50 கிலோவும் நீர்வழி உரத்தில் அளிக்கப்பட்டது.

மரவள்ளி நடவு செய்த மூன்றாம் நாள் வயலில் ஈரம் இருக்கும் போது புளுக்குளோரலின் களைக்கொல்லி 800 மிலி / ஏக்கர் தெளித்து களை கட்டுப்படுத்தப்பட்டது. கைக்களை 6 முறை சராசரி இடைவெளியில் பயிரின் வளர்ச்சி பருவத்தில் எடுக்கப்பட்டது.

**நுண்ணுட்டச்சத்து மேலாண்மை**

இலைவழியாக ஜிங்க் சல்பேட் 0.5% (5 கிராம் /லிட்டர்) என்றளவில் கலந்து 60 வது மற்றும் 90 வது நாளில் தெளிக்கப்பட்டது.

**பூச்சி தாக்குதல்**

வெள்ளை ஈ தாக்குதல் பயிரின் வளர்ச்சி பருவத்தில் காணப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்த அசிட்டமபிரைடு (2 கிராம் /லிட்டர்) தண்ணீரில் கலந்து தெளிக்கப்பட்டது.

**அறுவடை**

மரவள்ளி 11 வது மாதத்தில் அறுவடைக்கு தயாரானது. இலைகள் பழுத்து விழுதல் மற்றும் மண்ணில் வெடிப்புகள் உண்டாதல் கிழங்குகள் அறுவடைக்கு தயார் ஆவதற்கான அறிகுறிகள் ஆகும்.

**வரவு செலவு**

| விபரம் | ஏக்கருக்கு (ரூ) |
|---|---|
| உழவு மற்றும் நிலம் தயாரிப்பு | 5000 |
| அடியுரம் | 5000 |
| விதைக்கரணை | 1500 |
| நடவு | 1500 |
| உர மேலாண்மை | 12000 |
| களை மேலாண்மை | 6000 |
| நுண்ணுட்டச்சத்து மேலாண்மை | 600 |
| பூச்சி மேலாண்மை | 600 |
| அறுவடை ரூ. 500 / டன் | 10000 |
| **மொத்த செலவு** | **42200** |
| **வருமானம்** | |
| மகசூல் | 18 டன்கள் |
| **மொத்த வருமானம்** | **144000** |
| **நிகர இலாபம்** | **101800** |

எனவே மரவள்ளி சாகுபடி செய்து ஏக்கருக்கு சுமார் ஒரு இலட்சம் வரை வருமானம் பெறலாம்.

**குறிப்பு**

இவர் இந்த வருடமும் தனது 3 ஏக்கர் நிலத்தில் மரவள்ளி நடவு செய்துள்ளார். கடந்த வருடம் விலை மிகவும் குறைவாக ரூ 4000 /- டன் என்ற விலையில் விற்பனையானது.

**முகவரி**

திரு தங்கவேலு
த/ பெ ஆட்டுக்காரன்
சோமனஹள்ளி கிராமம்
பொடுத்தம்பட்டி அஞ்சல்
பாலக்கோடு வட்டாரம்
தருமபுரி மாவட்டம்.
அலைபேசி 94433 30392

